# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

## (DEPOSITION OF WITNESS

**வா.சா.2-)**

**அசல் வழக்கு எண். 90/2019**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ரமேஷ்குமார் | தாலுக்கா | கோவை வடக்கு |
| தந்தை பெயர் | பழனிச்சாமி | கிராமம் | கணபதி |
| பணி | சார் ஆய்வாளர்<br>சர்வேயர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 11.03.2026 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

1. நான் கோவை வடக்கு தாலூக்காவில் சார் ஆய்வாளர் சர்வேயராக பணியாற்றி வருகிறேன். நான் அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீ.ம.சா.ஆ.2 மற்றும் 3 வரைபடத்தை நான் தான் கொடுத்தேன். பத்திரப்படியும், அனுபவப்படியும் இரு வரைபடங்கள் தாக்கல் செய்துள்ளேன். பத்திரப்படி உள்ள வரைபடத்திற்கும், அனுபவப்படி உள்ள வரைபடத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளது என்றால் ஆமாம். அனுபவப்படி உள்ள வரைபடத்தில் என்ன ஆக்கிரமிப்பு உள்ளது என்றால் பத்திரப்படி உள்ள வரைபடத்தில் பொதுத்தடம் உள்ளது, ஆனால் அனுபவத்தின் படி உள்ள வரைபடத்தில் பொதுப்பாதை இல்லை. பொதுப்பாதை உள்ள இடத்தில் கட்டிடம் உள்ளது என்றால் ஆமாம்.

2. ஆவணத்தின் படி பொதுப்பாதையின் அகலம் 4 அடி 6 இஞ்ச் உள்ளது. நீளம் 34 அடி ஆகும். அனுபவப்படி உள்ள வரைபடத்தில் கிழபுறம் 6 அடி அகலம், மேல்புறம் 2 அடி 6 இஞ்ச் ஆகவும், நீளம் 38 அடியில் நான் அளக்கும்போது கட்டிடம் இருந்தது. ஆக்கிரமிப்பு உள்ள பகுதியை சிவப்பு நிறமிட்டு காட்டியுள்ளேன். அனுபவப்படி உள்ள வரைபடத்தில், வடபுறத்தில் மற்றொரு ஆக்கிரமிப்பு பகுதியை

சிவப்பு நிறமிட்டு காட்டியுள்ளேன். அதில் நீளம் எவ்வளவு என்றால் 2 அடி ஆகும். அதன் அகலம் குறிப்பிடவில்லை. முக்கோண வடிவில் இருந்தது. அந்த ஆக்கிரமிப்பு பகுதி என்னவாக இருந்தது என்றால் படிக்கட்டு போன்று இருந்தது. மேற்படி ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள புகைப்படம் நான் சொத்தை அளக்கும்போது எடுத்தது என்றால் சரிதான்.

**1 முதல் 5 பிரதிவாதிகள் இந்த வழக்கில் ஏற்கனவே ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur